மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

THIRU N. DENNIS : May I know whether the Government would consider that such an arrangement would be an effective method of propaganda for family planning?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மைக்ரோபோன், ஆம்ப்ளிஃபையர் முதலானவைகளை வைப்பதன் மூலமாகவும், பாடல் தட்டுகளை அதிகமாக பயன்படுத்துவதன் மூலமாகவும், பாடல் தட்டுகளை அதிகமாகப் பயன்படுத்துவதன் நடைபெற வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இவை வாங்கித் தரப்படவில்லை. இது ஒரு வகையான பிரச்சாரம். வானொலியில் ஒரு வகையான பிரச்சாரம் தொடர்ந்து நடைபெறுகிறது. இன்னும் அதுபற்றி அவ்வப்பொழுது பொது மக்கள் தலைவர்களுடைய பேச்சு பிரச்சாரமாக அமைகிறது. மக்களுடைய மனம் மெல்ல மெல்ல மாறத்தக்க வகையில் இருக்கிறது என்று கருதுகிறேன்.

Supply of ice for Hospitals

* 57 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start an Ice Manufacturing Unit in the Public Sector for supply of ice to Hospitals in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

(இ) கேள்வி எழாது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இதன் விலை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மருத்துவமனைகளில் இதன் அவசியத்தை உணர்ந்து இதை உற்பத்தி செய்ய அரசின் சார்பில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதனுடைய விலை அதிகரித்தாலும்கூட மருத்துவமனைகளில் இதற்காக ஆகக்கூடிய செலவு மிகச் சாதாரணமான செலவுதான். ஐஸ் உற்பத்தி

1973 ஆகஸ்ட் 7]

செய்வதற்காகவென்று ஒரு தனித் தொழிற்சாலை நிறுவ வேண்டிய அவசியம் இதுவரை உணரப்படவில்லை.

Seminar on linking of Cauvery with Ganges

* 58 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Irrigation Engineers of the State Government have submitted any papers to the Seminar on the Scheme for linking of Cauvery with Ganges held in Delhi during January 1973; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இம்மாநில பாசனப் பொறியாளர்களால் இக்கருத்தரங்கில் இரு தொழில்நுட்ப ஆய்வு அறிக்கைகள் அளிக்கப்பட்டன. இத்தொழில் நுட்ப ஆய்வு அறிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய விவரங்களாவன :—

(1) கோதாவரி நதியின் குறுக்கேயுள்ள போச்சம்பாடு நீர்த்தேக்கம் பாசன வசதி பெறும் வகையில் மாற்றுத் திட்டம் ஒன்றிற்கான எற்புடைமை ஆய்வுகள் செய்யப்படுதல்; இதனால் கீழுள்ள பகுதிக்கு நீரை இறைத்து அனுப்புவது தவிர்க்கப்படும்.

(2) காவிரியை கோதாவரி, கிருஷ்ணா ஆகிய நதிகளுடன் இணைக்கும் வேலையை முதல் கட்டத்திலேயே மேற்கொள்ளலாம். இப்பாசனப் பகுதியில் நீரை இறைத்து அனுப்ப வேண்டிய தேவையில்லாததாலும் கால்வாய் வெட்டும் வேலை முன்னேறிக் கொண்டு வருகையிலேயே இதனால் பயனடையலாம் என்பதாலும் மேற்படி வேலையை முதல் கட்டத்திலேயே மேற்கொள்ளலாம்.

(3) கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரை காவிரிக்குத் தென்புறமிருக்கிற பகுதிகள் பயனடையும் வகையில் கிழக்கு நோக்கித் தமிழகத்திற்குத் திருப்பி விடுதல்.

திரு. என். கே. பழனிசாமி: இந்தக் கருத்தரங்கில் கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், தமிழ் நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய தண்ணீர் குறைவாக இருக்கும் என்ற ஒரு அபிப்பிராயம் சொல்லப்பட்டதா ?